Department of Examinations Sri Lanka

6393

AL/2021(2022)/25/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

| | | |
|---|---|---|
| ශ්‍රී ලංකා ඉතිහාසය | I | (I කොටස) |
| இலங்கை வரலாறு | I | (பகுதி I) |
| History of Sri Lanka | I | (Part I) |

**25 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை**

**சுட்டெண் :** ..................................

**அறிவுறுத்தல்கள் :**

- ※ இப்பகுதி **40** வினாக்களைக் கொண்டுள்ளது. எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
- ※ ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள **ஐந்து** தெரிவுகளில் **ஒன்று** மட்டுமே சரியானது. அச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கேற்ப உமது விடையைக் குறித்துக் காட்டுக.**
- ※ பகுதி **I** இற்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
- ※ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

## பகுதி I

- **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**1.** (1) புந்தல (2) தொரவக்க (3) யடஹெலன
(4) குதிரைமலை (5) கந்தகாடு (......)

**2.** (1) உபதிஸ்ஸகம (2) அனுராதகம (3) உருவெலகம
(4) விஜிதகம (5) புன்ககம (......)

**3.** (1) செரந்தீப் (2) சுவர்ணபூமி (3) செலோன்
(4) தப்ரபேன் (5) பலசிமுண்டு (......)

**4.** (1) கஹபதி (2) பூபதி (3) பதவிபதி
(4) மஹிபதி (5) பிருதிவிஸ்வர (......)

**5.** (1) ரத்னாவலி (2) கல்யாணவதி (3) லீலாவதி
(4) சமுத்ராதேவி (5) திரிலோகசுந்தரி (......)

**6.** (1) கங்கசிரிபுர (2) செங்கடகல (3) கந்தேநுவர
(4) கட்டுபுலுநுவர (5) சிறிவட்டனபுர (......)

**7.** (1) ஜெரனிமோ தி அசிவீடோ (2) ஜோர்ஜ் தி அல்மெய்டா (3) லொறன்ஸோ தி அல்மெய்டா
(4) நூனோ அல்வாரிஸ் பெரேரா (5) ஜோர்ஜ் தி அல்பேக்கர் (......)

[பக். 2 ஐப் பார்க்க

**8.** (1) ரைகிளப் வான் கூன்ஸ் (2) ஜான் ஷோரய்டர்
(3) ஜான் மட்சூய்கர் (4) விலெம் வான் இம்ஹொவ்
(5) ஜோரிஸ் வான் ஸ்பில்பேர்கன் (......)

**9.** (1) நான்கு கோறளை (2) ஏழு கோறளை (3) சப்பிரகமுவ
(4) நுவரகலாவிய (5) உடுநுவர (......)

**10.** (1) டி. எஸ். சேனநாயக்கா (2) ஜோன் கொத்தலாவல
(3) டபிள்யு. தஹநாயக்கா (4) சிறிமா ஆர். டி பண்டாரநாயக்க
(5) வில்லியம் கோபல்லாவ (......)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள் வீதம்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**11.** (1) தேவநம்பியதீசனின் ஆட்சி - பிக்குணி சங்கமித்தை
(2) மகாசேனனின் ஆட்சி - சங்கமித்தை பிக்கு
(3) ஸ்ரீ மேகவண்ணனின் ஆட்சி - ஹேமமாலாவும் தந்தவும்
(4) மகாநாமனின் ஆட்சி - பாகியன் பிக்கு
(5) தாதுசேனனின் ஆட்சி - ஹியுன்சாங் பிக்கு (......)

**12.** (1) மூன்றாம் விஜயபாகு - தம்பதெனியா இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன்
(2) சேனாசம்மத விக்கிரமபாகு - கண்டி இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன்
(3) முதலாம் இராஜசிங்கன் - சீதாவாக்கை இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன்
(4) வில்லெம் ஜே கொஸ்டர் - இலங்கையின் முதலாவது ஒல்லாந்த ஆளுநர்
(5) பிரடெரிக் நோர்த் - இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர் (......)

**13.** (1) திருக்கோணேஸ்வர ஆலயம் - திருகோணமலை
(2) திருக்கேதீஸ்வரம் ஆலயம் - மன்னார்
(3) முன்னேஸ்வரம் ஆலயம் - சிலாபம்
(4) புருண்டி ஆலயம் - சீதாவாக்கை
(5) திருக்கோவில் - நல்லூர் (......)

**14.** (1) றொபேர்ட் பிறௌண்றிக் - கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியமை
(2) தோமஸ் மெயிற்லண்ட் - இராஜகாரிய முறையை ஒழித்தமை
(3) எட்வர்ட் பாண்ஸ் - கொழும்பு - கண்டி வீதி அமைக்கப்பட்டமை
(4) ஆர்தர் கோர்டன் - கலாவாவியை புனருத்தாரணம் செய்தமை
(5) ஆர்தர் ஹவ்லொக் - தானிய வரியை ஒழித்தமை (......)

**15.** (1) சைவப் பிரகாச சபை - ஆறுமுக நாவலர்
(2) பௌத்த பிரம்ம ஞான சபை - ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்
(3) இராமகிருஷ்ண மிஷன் - சுவாமி விவேகானந்தர்
(4) மகாபோதி சங்கம் - அநகாரிக தர்மபால
(5) இரத்மலானை பரமதம்மசேதிய பிரிவேனா - ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் (......)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள்/ திகதிகள் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/ கூற்றுகள்/ திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள்** எழுதுக.



Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

16.

| X | Y |
|---|---|
| (i) பிளினி | A இலங்கையைக் குறிப்பிடும் முதல் தேசப்படம் |
| (ii) தொலமி | B உரோமுக்குச் சென்ற இலங்கையின் தூதுப் பயணம் பற்றிய விவரிப்பு |
| (iii) பாஹியன் | C யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய விவரிப்பு |
| (iv) கொஸ்மஸ் | D அபயகிரி விகாரையின் தலதா பெரஹர பற்றிய விவரிப்பு |
| (v) இபன் பத்தூதா | E இலங்கையின் புராதன வியாபாரம் பற்றிய விவரிப்பு |

(1) ABCED (2) BADEC (3) CBAED (4) DAEBC (5) DBCEA (……)

17.

| X | Y |
|---|---|
| (i) சாரார்த்தசங்கிரகம் | A கம்பளைக் காலம் |
| (ii) பூஜாவலிய | B கோட்டைக் காலம் |
| (iii) மயூர சந்தேச | C தம்பதெனியாக் காலம் |
| (iv) காவ்ய சேகர | D பொலன்னறுவைக் காலம் |
| (v) புத்சரண | E அனுராதபுரக் காலம் |

(1) AECBD (2) CEDBA (3) DEBCA (4) EBADC (5) ECABD (……)

18.

| X | Y |
|---|---|
| (i) முதலாம் இராஜராஜன் | A சீனா |
| (ii) மாகன் | B பாண்டிய |
| (iii) சந்திரபானு | C காலிங்க |
| (iv) ஜடாவர்மன் | D சோழ |
| (v) செங்கோ | E ஜாவக |

(1) BADEC (2) BDCAE (3) DCEBA (4) DBECA (5) ECBAD (……)

19.

| X | Y |
|---|---|
| (i) ஒவிடோர் | A கனிஷ்ட வர்த்தகர் |
| (ii) மஹாபத்தே கப்பித்தான் | B வருமானத்துக்குப் பொறுப்பான அதிகாரி |
| (iii) ஒண்டர் கூப்மன் | C நீதிபதி |
| (iv) விடோர் டி பசெந்தா | D சிரேஷ்ட வர்த்தகர் |
| (v) ஒபர் கூப்மன் | E கறுவா திணைக்களத்தின் அதிகாரி |

(1) BEACD (2) CAEBD (3) CBDAE (4) DBECA (5) EBADC (……)

20.

| X | Y |
|---|---|
| (i) எமர்சன் டெனன்ற் | A புராதன இலங்கை |
| (ii) மேஜர் வோப்ஸ் | B இலங்கை |
| (iii) தோமஸ் ஸ்கின்னர் | C காட்டுப் பெருக்கம் (Jungle Tide) |
| (iv) ஜோன் ஸ்ரீல் | D இலங்கையில் பதினொரு ஆண்டுகள் |
| (v) ஹென்றி பாக்கர் | E இலங்கையில் ஐம்பது ஆண்டுகள் |

(1) ABCED (2) BCDAE (3) BADEC (4) BDECA (5) EBDAC (……)

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள்** எழுதுக.

21. **புராதன நீர்ப்பாசனப் பணிகள்**
   (1) தேவநம்பிய திஸ்ஸ மன்னன் நுவரவாவியைக் கட்டினான்.
   (2) வசப மன்னன் காலம் தொடக்கம் பெரிய குளங்களைக் கட்டுதல் ஆரம்பமானது.
   (3) தனியார் உரிமையின் கீழ் சில குளங்கள் இருந்தன.
   (4) திஸ்ஸ வாவியையும் கலாவாவியையும் இணைக்கும் கால்வாய் ஜய கங்கை என அழைக்கப்பட்டது.
   (5) முதலாம் பராக்கிரமபாகு மன்னன் காலம் நீர்ப்பாசன அபிவிருத்தியின் உச்ச நிலையைக் குறிக்கின்றது. (……)

[பக். 4 ஐப் பார்க்க

**22.** **நிஸ்ஸங்க மல்லன் எதிர்நோக்கிய சவால்கள்**
(1) விவசாயிகளின் (கொவிகுல) எதிர்ப்பு
(2) கலிங்க வம்சத்தின் அங்கத்தவராதல்
(3) பாண்டிய வம்சத்தவர் சிம்மாசனத்துக்கு உரிமை கோருதல்
(4) முன்னைய ஆட்சியில் உயர் பதவி வகித்தவர்களால் ஏற்பட்ட சவால்கள்
(5) சஹஸ்ஸமல்லனின் அச்சுறுத்தல்கள் (……)

**23.** **ஒல்லாந்தரின் சமயக் கொள்கை**
(1) பாடசாலைகள், தேவாலயங்கள் மூலம் சமயப் பிரசாரங்கள் செய்யப்பட்டமை
(2) புரட்டஸ்தாந்து சமயத்துக்கு மட்டும் அனுசரணை வழங்கியமை
(3) வஹகோட்டை தேவாலயத்துக்கு முக்கிய இடம் அளித்தமை
(4) உரோமன் கத்தோலிக்க சமயத்தை அடக்கியமை
(5) சிவில் நிர்வாகத்தின் உயர் பதவிகளை புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கு மட்டும் வழங்கியமை (……)

**24.** **கோல்புறுக் - கமரன் ஆணைக்குழுவின் சிபாரிசுகள்**
(1) இராஜகாரிய முறையை ஒழித்தமை
(2) சம்பளத்துக்குப் பதிலாக காணிகள் வழங்கப்பட்டமை
(3) ஆளுநரின் அதிகாரம் குறைக்கப்பட்டமை
(4) சீரான நீதி முறைமை தாபிக்கப்பட்டமை
(5) சட்ட நிர்வாக, சட்டநிரூபண சபைகள் தாபிக்கப்பட்டமை (……)

**25.** **பொன்னம்பலம் அருணாச்சலம்**
(1) அரசியல் சீர்திருத்தம் பற்றி விசேட கவனத்தைச் செலுத்தியவராவார்.
(2) நாட்டில் பல்கலைக்கழகம் ஒன்றை தாபிக்க வேண்டுமெனக் கருத்து வெளியிட்டார்.
(3) இலங்கை தேசிய காங்கிரசின் முதல் தலைவராவார்.
(4) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைத் தாபிக்க காரணமானவராவார்
(5) இலங்கை சிவில் சேவையில் ஈடுபட்டவராவார். (……)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **4** எனவும்
**வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ……… **5** எனவும்
**அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மாத்திரம் சரி | (A) யும் (C) யும் மாத்திரம் சரி | (B) யும் (C) யும் மாத்திரம் சரி | (C) யும் (D) யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** முதலாம் விஜயபாகு தொடர்பான கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) முதலாம் விஜயபாகு இளமைக் காலத்தில் கலிங்கு இளவரசன் என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.
(B) முதலாம் விஜயபாகுவின் மகள் பாண்டிய இளவரசனைத் திருமணம் செய்தார்.
(C) பனாகடுவ செப்பேடு, முதலாம் விஜயபாகு எதிர்நோக்கிய தடைகள் பற்றி வெளிப்படுத்துகிறது.
(D) முதலாம் விஜயபாகுவினால் புதல்னாவுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டன. (……)

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

**27.** யாப்பஹுவ இராசதானி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?

(A) யாப்பஹுவ சுபபத்த என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

(B) யாப்பஹுவ இராச்சியத்தின் முதலாவது அரசன் முதலாம் புவனேகபாகு ஆவான்.

(C) யாப்பஹுவ அரண்மனை பற்றி சிறப்பான விவரிப்பினை மார்க்கபோலோ வழங்கியுள்ளார்.

(D) புனித தந்த தாது பெலிகலவிலிருந்து யாப்பஹுவவுக்குக் கொண்டுவரப்பட்டது. (......)

**28.** பத்தொன்பதாம் நூற்றாண்டின் கலாசார மறுமலர்ச்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?

(A) சூரியமல் இயக்கம் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்துக்கான தலைமைத்துவம் தாங்கி ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டது.

(B) அநகாரிக தர்மபால பௌத்தசமய மறுமலர்ச்சிக்கு பெரும்பங்களிப்புச் செய்தார்.

(C) ஆறுமுகநாவலரின் தலைமையின் கீழ் இந்துசமய மறுமலர்ச்சி இயக்கம் ஆரம்பமாகியது.

(D) இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி ஏ. சீ. எஸ். ஹமீட் தலைமையின் கீழ் ஆரம்பமாகியது. (......)

**29.** மதுவிலக்கு இயக்கம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?

(A) பிரித்தானியர்களின் மதுவரிக் கொள்கைக்கு எதிராகக் கிளம்பிய போராட்டமே மதுவிலக்கு இயக்கமாகும்.

(B) பிரம்மச்சாரி வலிசிங்க ஹரிஸ்சந்திர என்பவரே இந்த இயக்கத்தின் முதலாவது தலைவர் ஆவார்.

(C) ஹாபிடிகம கோறளையின் மதுவிலக்கு சபை செயலூக்கம் மிக்க அமைப்புக்களில் ஒன்றாகும்.

(D) ஜேம்ஸ் டி அல்விஸ் என்பவரே மதுவிலக்கு இயக்கத்தின் முன்னோடி ஆவார். (......)

**30.** 1972 குடியரசு அரசியல் யாப்பு தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?

(A) ஜனாதிபதி பெயரளவில் நிறைவேற்று அதிகாரமுடையவராகச் செயற்படுதல்

(B) சட்டசபை ஓரங்க சபையாகத் (Unicameral) தாபிக்கப்பட்டது.

(C) ஜனாதிபதியை குற்றப் பிரேரணை ஒன்றின் மூலம் நீக்க முடியும்.

(A) மக்களின் மனக்குறைகளைக் கவனிப்பதற்கு (ஒம்புட்ஸ்மன்) குறைகேள் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். (......)

● **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** ஸ்ரீ மேகவர்ணன் மகாசேனனின் மகன் என்பதை உறுதிப்படுத்தும் கல்வெட்டு எது?

(1) ஹபஸ்ஸ கல்வெட்டு
(2) பாலுமக்கிச்சாவ கல்வெட்டு
(3) தோணிகல கல்வெட்டு
(4) வேவல்கட்டிய கல்வெட்டு
(5) பதுளை தூண் கல்வெட்டு (......)

**32.** இலங்கையின் கடைசிச் சிங்கள மன்னன் என்று கருதப்படுபவன் யார்?

(1) சேனரத் மன்னன்
(2) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்
(3) ஸ்ரீ விஜய இராஜசிங்கன்
(4) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
(5) இராஜாதி இராஜசிங்கன் (......)

**33.** சிலாபம் சங்கத்தின் முதலாவது தலைவர் யார்?

(1) டபிள்யு. எவ். குணவர்த்தன
(2) ஆனந்த குமாரசுவாமி
(3) ஜேம்ஸ் பீரிஸ்
(4) ஈ. டபிள்யு. அதிகாரம்
(5) விக்டர் கொரயா (......)

**34.** கொழும்பு சாஹிராக் கல்லூரியை தாபித்தவர் யார்?

(1) பதியுதீன் மஹ்மூத்
(2) அப்துல் காதர்
(3) ரி. பி. ஜாயா
(4) எம். சி. சித்திலெப்பை
(5) ஏ. எச். எம். இஸ்மயில் (......)

**35.** இலங்கையில் இலவசக் கல்வியின் தந்தை என்று கருதப்படுவர் யார்?

(1) ஈ. ஏ. நுகவல
(2) சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா
(3) ரிச்சட் அலுவிகார
(4) எம். டி. பண்டா
(5) பிலிப் குணவர்த்தனா (......)

[பக். 6 ஐப் பார்க்க

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | இலங்கையில் பிக்குமார்களிடையே முதலாவது நிகாய பிரிவினை மகாசேனனின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்தது. | மகாசேனன் அபயகிரி விகாரையை பிக்கு சங்கமித்தவிடம் நன்கொடையாக வழங்கியமை இலங்கையில் நிகழ்ந்த முதலாவது நிகாய பிரிவினையைக் குறிப்பிடுகின்றது. | (.........) |
| **37.** | சோரநாகன் என்பவன் பௌத்த ஆலயங்கள் பலவற்றைக் கொள்ளையடித்த ஆட்சியாளன் ஆவான். | வசப மன்னனின் காலத்துக்குரிய கல்வெட்டுக்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. | (.........) |
| **38.** | இலங்கையின் கடைசி ஒல்லாந்த ஆளுநர் ஜே. ஜி. வன் அங்கள்பேர்க் ஆவான். | எலதெத்த, பண்டாரகொஸ்வத்த ஆகிய இடங்களில் கண்டி மன்னனின் சிறைக்கைதியான றொபட் நொக்ஸ் நீண்ட காலம் வசித்து வந்தான். | (.........) |
| **39.** | பிரித்தானிய ஆட்சியாளர்கள் 19 ஆம் நூற்றாண்டில் முக்கியமாக அரசியல், பொருளாதார காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பெருந்தெருக்கள் வலையமைப்பை நிர்மாணித்தனர். | போக்குவரத்தினை இலகுபடுத்துவதற்கும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை உட்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கும், கண்டி மாவட்டங்களில் நிர்வாகத்தை வினைத்திறனுடன் நடாத்துவதற்கும் பெருந்தெருக்களை அமைத்தல் அவசியம் என்பதை அக்கால பிரித்தானிய ஆட்சியாளர் நன்கு புரிந்து கொண்டிருந்தனர். | (.........) |
| **40.** | ஹஜ்ஜி மரைக்காயரை மகாதிகாரமாக நியமித்தமையே 1915 சிங்கள - முஸ்லிம் கலவரத்துக்கான உடனடிக் காரணமாகும். | 1915 சிங்கள முஸ்லிம் கலவரம் பற்றிய வழக்கு போல். ஈ. பீரிஸ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. | (.........) |

* *

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
sri lanka exams paper

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

ශ්‍රී ලංකා ඉතිහාසය I
இலங்கை வரலாறு I
History of Sri Lanka I

25 T

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ....................




Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (II කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி II)
History of Sri Lanka I (Part II)

25 T I

## இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை

**அறிவுறுத்தல்கள் :**

※ **முதலாம்** வினா கட்டாயமானது.

※ **முதலாம்** வினாவுக்கும் **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இலங்கையின் புறவுருவப்படம்** வழங்கப்பட்டுள்ளது.)

### பகுதி A

**1.** உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

(i) ஆனையிறவு (ii) கொடவாய (iii) கிரிந்தி ஓயா
(iv) வடமேல் மாகாணம் (v) கல்பிட்டி (vi) களுத்துறை
(vii) தெதுறு ஓயா (viii) யோத வாவி (ix) கொழும்பு
(x) பலான (xi) சேனநாயக்க சமுத்திரம் (xii) மாத்தறை

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

### பகுதி B

**2.** பொலன்னறுவைக் காலத்தின் இறுதிவரை இலங்கையின் வரலாற்றை உருவாக்குவதில் வெளிவாரி புவியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை பின்வரும் கருப்பொருளின் கீழ் பரிசீலிக்குக.

(i) இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருத்தல்
(ii) இந்து சமுத்திரத்தின் மத்திய இடத்தில் அமைந்திருத்தல் (16 புள்ளிகள்)

**3.** "காவந்தீச மன்னால் இடப்பட்ட அத்திவாரத்தின்மீது துட்டகைமுனு மன்னன் தீவில் அரசியல் ஒன்றிணைப்பினை ஏற்படுத்தினான்."

(i) மாகம இராச்சியத்தைத் தாபித்த ஆட்சியாளனின் பெயரைத் தருக. (01 புள்ளி)
(ii) காவந்தீச மன்னனுக்கு முன்னைய ஆட்சியாளர் **இருவரின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)
(iii) காவந்தீசனின் சாதனைகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)
(iv) துட்டகைமுனுவின் அரசியல் சாதனைகள் பற்றி விமர்சனரீதியாகப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

**4.** இராசரட்டை நாகரிகம் அழிவடைந்தமைக்கும் வீழ்ச்சியடைந்தமைக்கும் ஏதுவான முக்கிய காரணிகளை விமர்சனரீதியாகப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**5.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கக்குறிப்புக்கள் எழுதுக.

(i) வசப மன்னன்

(ii) முதலாம் விஜயபாகுவினால் சோழர் ஆதிக்கத்திலிருந்து இராசரட்டை விடுதலையடைதல்

(iii) தம்பதெனியா காலத்தில் கலாசாரம்

(iv) ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரை

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** போர்த்துக்கேயர் கரையோரப் பிரதேசங்களில் அவர்களின் ஆதிக்கத்தைத் தாபித்த விதத்தினை பின்வரும் விடயங்களின் கீழ் பரிசீலிக்குக.

(i) கோட்டை இராச்சியத்தில் தங்களின் ஆதிக்கத்தைத் தாபித்தல் (10 புள்ளிகள்)

(ii) யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றுதல் (6 புள்ளிகள்)

**7.** கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் சாதனைகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.

(i) ஒல்லாந்தருடனான தொடர்புகள்

(ii) பௌத்த மறுமலர்ச்சி (16 புள்ளிகள்)

**8.** "டொனமூர் அரசியல் யாப்பு பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கை அரசியல் யாப்பு விருத்தியில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும்."

(i) டொனமூர் ஆணைக்குழு வருகைதந்த போது இலங்கையில் பிரித்தானிய ஆளுநராக இருந்தவரின் பெயரைத் தருக. (01 புள்ளி)

(ii) டொனமூர் பிரபு தவிர்ந்த அந்த ஆணைக்குழுவில் இருந்த வேறு **இரண்டு** ஆணையாளர்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) குடியேற்ற நாட்டு அரசாங்கம் டொனமூர் ஆணைக்குழுவை நியமித்தமைக்கு காரணமான விடயங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) டொனமூர் அரசியல் யாப்பின் முக்கியத்துவத்தை அதன் முக்கிய அம்சங்களின் அடிப்படையில் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

**9.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாக சிறுகுறிப்பு எழுதுக.

(i) பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோப்பிப் பயிர்ச்செய்கை

(ii) 1848 பிரித்தானியருக்கு எதிரான போராட்டம்

(iii) டி. எஸ். சேனநாயக்கா

(iv) தேசியமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka